# தமிழ் இணையக் கல்விக்கழகம்
## சென்னை – 600 025.

## இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)
## முதலாம் ஆண்டு – இரண்டாம் பருவம்

## ஜனவரி – பிப்ரவரி 2026
## C021 இலக்கணம் – 1 (எழுத்து)

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2ல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

### பிரிவு – 1

**ஒரு சொல் / ஒரு தொடரில் விடை தருக. (15x1=15)**

1. தமிழில் உள்ள இலக்கண நூல்களில் மூன்றின் பெயரைக் கூறுக.
2. போர், வீரம், இரக்கம், நிலையாமை, கொடை, கல்வி முதலியவை எல்லாம் ------------------ எனப்பட்டன.
3. தொல்காப்பியத்திற்குப் பாயிரம் எழுதியவர் யார்?
4. பவணந்தி முனிவரால் இயற்றப்பட்ட இலக்கண நூல் எது?
5. நிலம், பொழுது ஆகிய இரண்டும் ---------------- எனப்படும்.
6. நிலம் சார்ந்த ஒழுக்கத்தைக் குறிப்பது எது?
7. மெய் எழுத்து --------------- மாத்திரை பெறும்.
8. ஒன்றுடன் ஒன்று ஒத்துழைக்கும் உறுப்புகள் யாவை?
9. ஓர் எழுத்து மட்டும் தனித்து நின்று பொருள் தருமானால் ------------- என்று அழைக்கப்படுகின்றது.
10. புணர்ச்சி என்றால் ----------------- என்று பொருள்.
11. பொருளின் அடிப்படையில் புணர்ச்சி எத்தனை வகைப்படும்? அவை யாவை?
12. சார்பெழுத்து எத்தனை வகைப்படும்?
13. புன்னையங்கானல் – பிரித்து எழுதுக.
14. போரில் வெற்றி பெற்ற அரசனைப் புகழ்ந்து பாடும் திணை எது?
15. வன்தொடர்க் குற்றியலுகரத்தின் முன் வல்லினம் மிகுமா?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.** **(5x3=15)**

16. சந்தி இலக்கணம் என்றால் என்ன? சான்று தருக.
17. சிறுபொழுதின் ஆறு காலப் பிரிவுகளைக் குறிப்பிடுக.
18. புறப்பொருள் திணைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
19. சுட்டு எழுத்துகள் என்றால் என்ன? சான்று தருக.
20. எழுத்துப் பிறப்பிற்குத் தெரிவிக்கப்படும் புறனடையை விளக்குக.
21. பகாப்பதத்தின் வகைகள் யாவை?
22. விட்டிசை என்றால் என்ன? சான்று தருக.
23. உருபு புணர்ச்சி என்றால் என்ன?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

24. (அ) சொல்லின் வகைகளைச் சான்று காட்டி விளக்குக.

(அல்லது)

(ஆ) சார்பு எழுத்துகளின் வகைகளை விவரிக்க.

25. (அ) எழுத்துகளின் பிறப்புக் குறித்து மொழியியலார் தெரிவிக்கும் கருத்தினைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) உயிர்எழுத்தொலிகளின் பிறப்புக் குறித்து, தொல்காப்பியம், நன்னூல் – இவற்றின் கருத்துகளை ஒப்பிட்டுக் கூறுக.

26. (அ) வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) வல்லினம் மிகா இடங்களை எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.

❋ ❋ ❋